முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1103

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.10.2022, வியாழக்கிழமை

1. ஞானசக்தி பீடமாய் பிரணவக்குடிலை
ஞானிகளெல்லாம் தங்கி அருள் புரியும் வண்ணம்
வானவர்கள் போற்ற அற்புதம் நடத்துகின்ற
வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞானபண்டிதன் யானும் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
இனிமைபட சுபகிருது நங்கை திங்கள்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 19 ம் நாள் 06.10.2022 வியாழக்கிழமை)
இயம்பிடுவேன் அரங்கன் நீ கேட்க
3. கேட்கவே அரங்கன் வழிதான் இந்த கலியுகம்
குறைகள் யாவும் நீங்கி மாற்றம் தனை
மாட்சிமைபட ஞான யுகமாக மாறும்
மக்களை எல்லாம் காக்கின்ற ஞான ஆட்சியும் மலரும்
4. மலருகின்ற அற்புதத்தை கலியுகத்தில்
மாதர்மத்தைக் கொண்டு நடத்துகின்ற ஒரே ஞானி
அழியாமை பெற்ற அரங்கன் நீதானப்பா
ஆறுமுகன் யான் ஆசைகொண்டு உன்னுள் கலந்து
5. உன் அவதாரத்தை வெற்றிகொள்ள வேண்டி
அனுதினமும் உந்தனுக்கு வரங்கள் கூட்டி
கூட்டியே பேரருளாய் உன்னுள் இருந்து
குவலயத்தை காக்கும் மகா சக்தியாக
6. ஆகவே ஆற்றல் கூட்டி வருகின்றேன்
அரங்கன் உன்னை கண்டுவரும் மக்களுக்கு
மக்களுக்கு மரணமல்லல் அகற்றி
மகத்துவமிக்க ஞானியாகும் அருளாசி தந்து
7. தந்துமே உன்னுள் யானே இருக்கின்றேன்
தவசி உன் கரம்பட்ட மக்களெல்லாம் கர்மவினை நீங்கி கலியில் ஞானிகளாகி
ஆகியே உன் அவதார நோக்கத்தை ஐயமற
அன்னவர்களும் இணைந்து பூர்த்திசெய்யக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–